00641

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - 2023/2024

இறுதிப்பரீட்சை

மட்டம் - 03

**EPU3338 – முன்பள்ளிப்பருவ நிறுவனத்தையும் ஆரம்ப பாடசாலையையும் வடிவமைத்தலும் திட்டமிடலும்**

காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

திகதி:- 01.06.2025 நேரம்: பி.ப 01.30 - பி.ப 03.30

பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.

## பகுதி – I

1. 'முகாமையாளர் தனது நிறுவன அமைப்பை உருவாக்குவதற்கு முன்னதாக கருத்திற் கொள்ள வேண்டிய ஆறு (06) முக்கிய கூறுகளை ரொபின்ஸ் (1992) அடையாளம் காண்கிறார்' அவற்றில் **ஒன்றினை (01)** உதாரணங்கள் மூலம் விளக்குக.
2. தலைமைத்துவ பாணிகள் **மூன்றினைக் (03)** குறிப்பிட்டு, அவற்றில் **ஒன்றினைச் (01)** சுருக்கமாக விளக்குக.
3. இலங்கையில் ஆரம்பப் பாடசாலை வகுப்பறை தொடர்பாக கற்றல் சூழல் என்றால் என்ன?
4. இலங்கையின் முன்பள்ளிகளில் முன்பள்ளி ஆசிரியர்கள் கணிப்பீட்டு பதிவுகளை எவ்வாறு வினைத்திறனாக பயன்படுத்துகிறார்கள்?
5. ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களின் **ஐந்து (05)** சிறந்த பண்புத்திறன்களைப் பட்டியலிட்டு, அவற்றினைச் சுருக்கமாக விவரிக்குக.
6. "முன்பள்ளி ஆசிரியர்கள், ஆசிரியர் முகாமைத்துவ பயிற்சித் திட்டங்களில் அடிக்கடி பங்கேற்க வேண்டும்"

   மேலுள்ள கூற்றுடன் நீங்கள் உடன்படுகின்றீர்களா? உங்களின் விடையை **மூன்று** (03) காரணங்களுடன் நியாயப்படுத்துக.
7. முன்பள்ளி அல்லது ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களை வகுப்பறைச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தும்போது சுற்றாடல்சார் வளங்களை எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பதைச் சுருக்கமாக விபரிக்குக.
8. முன்பள்ளி ஆசிரியர்கள் நிதி வளங்களை எவ்வாறு வினைதிறனாக முகாமைத்துவம் செய்கிறார்கள்?

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9. i. "முகாமைத்துவம்" என்ற பதத்தை வரையறுக்குக.

**(05 புள்ளிகள்)**

ii. முன்பள்ளி அல்லது ஆரம்பப் பாடசாலை ஆசிரியராக, வகுப்பறை கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை ஒழுங்கமைத்து செயற்படும்போது என்ன வகையான காரணிகளை கவனத்தில் கொள்ள வேண்டும்.

**(07 புள்ளிகள்)**

iii. முன்பள்ளி அல்லது ஆரம்பப் பாடசாலை கற்றல் நடவடிக்கைகளை முன்கூட்டியே திட்டமிடுவதன் முக்கியத்துவத்தை **நான்கு (04)** பொருத்தமான உதாரணங்களுடன் விபரிக்குக.

**(08 புள்ளிகள்)**

10. i. தலைமைத்துவத்தின் பண்புசார், நடத்தைசார் கோட்பாடுகளை ஆராய்க.

**(08 புள்ளிகள்)**

ii. இவ்விரு **(02)** கோட்பாடுகளில் ஆரம்பப் பாடசாலைகளில் வகுப்பறை முகாமைத்துவத்திற்கு பொருத்தமானது என்று நீங்கள் பரிந்துரைக்கும் கோட்பாடு எது? உமது விடையினை நியாயப்படுத்துக.

**(12 புள்ளிகள்)**

11. i. முன்பள்ளி அல்லது ஆரம்பப் பாடசாலையில் மனித வளம் என்றால் என்ன?

**(08 புள்ளிகள்)**

ii. முன்பள்ளி அல்லது ஆரம்பப் பாடசாலை மனித வள மேம்பாட்டின் முக்கியத்துவத்தை **நான்கு (04)** உதாரணங்களுடன் கலந்துரையாடுக.

**(07 புள்ளிகள்)**

iii. இலங்கையில் தொழிவாண்மைத்துவ ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டத்தில் அரசாங்கத்தின் வகிபங்கினை விமர்சன ரீதியாகப் பகுப்பாய்வு செய்க.

**(08 புள்ளிகள்)**

12. i. "தலைமைத்துவம்" என்ற பதத்தை வரையறுக்குக.

**(05 புள்ளிகள்)**

ii. சிறந்த தலைவரை அடையாளம் காணும்போது கருத்தில் கொள்ள வேண்டிய **ஐந்து (05)** காரணிகளை எழுதி, அவற்றில் **ஒன்றை (01)** உதாரணங்கள் மூலம் விளக்குக.

**(08 புள்ளிகள்)**

iii. தலைமைத்துவப் பண்புகள் **ஐந்தினை (05)** பட்டியலிட்டு, ஏதாவது அவற்றில் **இரண்டினை (02)** விபரிக்குக.

**(07 புள்ளிகள்)**

13. பின்வருவனவற்றில் ஏதேனும் **இரண்டு (02)** பற்றிய சிறு குறிப்புக்களை எழுதுக.

i. முன்பள்ளி மற்றும் ஆரம்பப் பாடசாலையில் சமூக வளங்கள்

ii. முன்பள்ளி மற்றும் ஆரம்பப் பாடசாலையில் பௌதீக வளங்களைப் பயன்படுத்துதல்

iii. முன்பள்ளியின் உட்புறக் கற்றல் சூழல்

iv. செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கும் ஒழுங்கமைப்பதற்கும் இடையிலான உறவு

**(10x02 = 20 புள்ளிகள்)**

- முழுப்பதிப்புரிமையுடையது -



87